1984 பிப்ரவரி 23]

எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்து, அங்கே தவறுகள் நடக்குமேயானால், அதைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரின் குடிநீர்க் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கான மாற்றுத் திட்டம்.

148—(*வினா 20915)—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் செயல் படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு முடிந்து ஆயுள் காப்பீட்டு கழகத்தின் நிதி உதவி பெறுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆயுள் காப்பீடு கழக நிதி உதவி பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் குடிநீர் நெருக்கடி இப்போது நீண்ட காலமாக இருக்கக் கூடிய பிரச்சினை. இப்போது ஆய்வு முடிந்திருக்கிறது. ஆகவே இப்போது முதல் கட்டமாக 'பைலட் ஸ்கீம்' என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதிலே பிரச்சினை எதனால் எழுந்தது என்றால், 1986ஆம் ஆண்டு எவ்வளவு ஜனத் தொகை இருக்க வேண்டுமென்று கணக்கிட்டுப் போட்டோமோ, அதை விட 20,000 பேர்களை அதிகமாக 1981-லேயே உற்பத்தி செய்து விட்டீர்கள். நீங்கள் திண்டுக்கல்லில்தான் இருக்கிறீர்கள். மக்கள் தொகை அதிக மானதால்தான் பிரச்சினை. இல்லையென்றால், இந்தப் பிரச்சினை கிடையாது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதி பெற்று வேலை செய்வதாக இருக்கிறது. அந்தத் திட்டம் ஆரம்பித்து தண்ணீர் கொடுக்க ஏற்பாடுகள் செய்யலாமா என்று அதிகாரிகளோடு இந்த அரசு ஆலோசனை செய்யும்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத திட்டம் ஆய்வு செய்து முடிந்து ஒரு பைலட் ஸ்கீமாக ஆரம்பிப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு கூடுதலான மழை பெய்து அதனால் நிறைய தண்ணீர் இருக்கிறது. ஆனால் திண்டுக்கல் நகரத்திற்கு உதவியாக இல்லை. இந்தத் தண்ணீரை பம்ப் செய்வதற்கு உண்டான ஏற்பாடுகள் இருக்கிறதா என்று கேட்டால் இல்லை என்று சொல்கிறார்கள. எனவே துரிதமான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ? அடுத்து, உயர்ந்த அழுத்தமான டாங்குகள் மூலமாக விநியோகம் செய்வதற்கு முயற்சிகளை அரசு எடுக்குமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதை நிறைவேற்றுவதற்கு முன்னதாக இடைக்கால ஏற்பாடாக, தண்ணீர் கொடுப்பதற்கு ஏற்பாடு ஏதாவது செய்யப்படுமா என்று கேட்கிறார்கள். இந்தக் கேள்வியை நான் என்ஜினியர்கள் இடத்தில் கேட்டு, அவர்கள் முடியும் என்றால், அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்வோம். முடியாது என்றால் கைவிட்டு விடுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 149 மற்றும் 150 ஒன்றாக எடுத்துக்கொள்ளப் பெறும்.

கைத்தறி வளர்ச்சிக்கான திட்டம்.

149 —(*வினா 16524) —திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1981-82 ஆண்டில் கைத்தறி வளர்ச்சிக்காகப் பல கோடி ரூபாயில் ஒரு திட்டம் உருவாகியுள்ளது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் இதுபற்றிய விவரம் என்ன ?

(இ) இத் திட்டத்தால் கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கு எந்த அளவு பலன் கிடைக்கும் ?